# நீல அடையாள அட்டையின் தகவல்கள்

## நீல அடையாள அட்டை என்றால் என்ன?

இது தூண் நகரத்தின் ஒரு உருவாக்கமாகும். இது பின்வரும் செயற்பாடுகளுக்குரிய விலையின் 50% பணத்தை திரும்பவும் பெறுவதற்கு அதிகாரமளிக்கிறது.

- பொதுபாடசாலைகளினால் ஒழுங்குபடுத்தப்பட்ட விடுமுறைகாலமுகாமிடல், பனிசறுக்கல்முகாமிடல்.
- பாடசாலைமுகாமிடல், ஒரு செயற்பாட்டிற்கான முகாமிடல், கல்விகற்றலுக்கான முகாமிடல்
- பாடசாலைசுற்றுலா, கல்விசுற்றுலா
- தூண் நகரத்தின் விடுமுறைகால நிகழ்வுகான நுழைவு அனுமதிபத்திரம் (Thuner Ferienpass)
- தூண் விடுமுறை பராமரிப்பு விடுதி (தீவு)
- இன்னும்பல பாடசாலை சம்பந்தபட்ட செயற்பாடுகள்
- பெற்றோர் ஒரு டொச்மொழி சமூகமளித்தால் 50 பிராங் சன்மானமாக வழங்கபடும்.

மேலும் இவ் அட்டை வைத்திருப்பவர்கள் வரையறைக்குட்பட்ட சொந்த விருப்பத்திற்குரிய பாடசாலைவிளையாட்டுபயிற்சி வகுப்பிற்கு சமூகமளிப்பதற்கு அதிகாரமளிக்கிறது.

## யார் இவ் அட்டையை வைத்திருப்பதற்கு அதிகாரமுள்ளவர் ?

நீலஅடையாள அட்டையானது தூண் நகர மாணவர்களுக்கு பாலர்பாடசாலை முதல் 9ம் வகுப்பு வரை வழங்கபடும். இவ் அட்டையை பெறுவதற்கான அனுமதியானது கடைசிவருட உங்கள் வருமானவரியை பொறுத்து அமையும். குடும்ப அங்கத்தவர் தொகை உங்கள் முழு வருடவருமானம் இவற்றை கருத்தில் கொண்டே இவ் அட்டை வழங்கபடுகிறது.

| குடும்ப அங்கத்தவர் தொகை | வருடவருமானம் SFr |
|---|---|
| 2 அங்கதவர் | 35'700.00 |
| 3 அங்கத்தவர் | 44'900.00 |
| 4 அங்கத்தவர் | 52'700.00 |
| 5 அங்கத்தவர் | 58'100.00 |
| 6 அங்கத்தவர் | 63'500.00 |
| 7 அல்லது அதற்கு மேல் | 66'500.00 |

## எப்படி இவ் அட்டையை பெற்றுகொள்ள முடியும்?

விண்ணப்பபடிவம் Amt für Bildung und Sport (Thunerhof) என்னும் இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- இவ் அட்டையை ஒரு வருடத்திற்கு வழங்கபடும். அடுத்த வருடம் மேல் குறிப்பிட்ட இடத்தில் சரியான தகமை இருப்பின் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

- சமூகசேவைஉதவிநிலயம் அல்லது அகதிகள்உதவிநிலயம் மூலம் உதவி பெறும் பெற்றேர்கள் அல்லது பாதுகாவலர்கள் இவ் அட்டையை பெறலாம். (தயவுசெய்து இவ் அட்டையில் சரியான இடத்தில் புள்ளடி இடவும்.)

- மொத்தவருமானத்தின் வருமானவரியின் தொகையானது (Quellensteuer) கழிபடுபவர்களுக்கு மட்டும்) வருமானவரி இலாகாவிற்கு தெரிந்து இருக்க-மாட்டாது. அதனால் பெற்றோர்கள் இதற்குரிய விண்ணப்பபடிவம் ஒன்றின் மூலம் விளங்கபடத்த வேண்டும். (விண்ணப்பபடிவம் Amt für Bildung und Sport ல் கிடைக்கும்) மொத்த வருமானத்தின் வரி அறவிடுதலானது வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு குறிப்பிட்ட வரி என தொகையை பொறுத்து பின்பற்றபடும்.

## எப்படி பணத்தை பெற்றுகொள்ளலாம் ?

- பணத்தை பெறுவதற்கான விண்ணப்பபடிவமானது அதற்குரிய நிகழ்வின் 6 மாதத்திற்கு பிந்தாமல் விண்ணப்பித்தல் செல்லுபடியாகும்.
- பணம் கட்டபட்ட பற்றுசீட்டு ஆசிரியரின் கையெழுத்துடன் சமர்பித்தால் இப் பணம் வழங்கப்படும்.
- இதற்குரிய விண்ணப்பபடிவமானது Rückerstattung Blaue Karte என்னும் பெயரில் Amt für Bildung und Sport இல் பெற்று கொள்ளலாம்.